**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்.**

**முன்னிலை:** N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.

2025 ஆம் வருடம் மே மாதம் 22 ம் தேதி, வியாழக்கிழமை

**M.P.1/ 2025**
**in**
**M.C.No.2/2024**

M. ஹரிபிரபாகரன் (32) ,
த/பெ.மணி
க.எண்.3/1744, நியூகாலனி,
இலக்கியம்பட்டி,
வெண்ணாம்பட்டி ரோடு,
தர்மபுரி வட்டம், தர்மபுரி மாவட்டம்.

**---- மனுதாரர் / எதிர்மனுதாரர் in M.C. No. 2 of 2024**

**/எதிர்/**

1. ஹர்சனா (26),
க/பெ.ஹரிபிரபாகரன்
த/பெ.சுரேஷ்குமார்
2. இளவர். பிரணய்
(இளவருக்காக இளவரின் பாதுகாவலர், அடுத்த நண்பர் மற்றும் தாயார் 1-ம் மனுதாரர் ஹர்சனா, அரசு மருத்துவமனை எதிரில், நங்கவள்ளி அஞ்சல், மேட்டூர் வட்டம்.

**---- எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் in M.C. No. 2 of 2024**

இந்த மனு **கு.வி.மு.ச. பிரிவு 311-ன்** கீழ் கடந்த **13.05.2025**-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரர் தரப்பிற்காக கற்றறிந்த **திரு.P.கலா பி.எ.,பி.எல்.,** அவர்களும், எதிரிமனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.C.வேல்முருகன், பி.ஏ.,பி.எல்.,** அவர்களும், முன்னிலையாகி இருதரப்பு வாதங்களை கேட்டும், இரு தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

1. **மனுவின் சுருக்கம்:-** இந்த மனு சம்பந்தப்பட்ட முதன்மை மனுதாரர் **கு.வி.மு.ச. பிரிவு 125-ன்** கீழ் இந்த மனுவின் எதிர்மனுதாரர் ஹர்சனா தனக்காகவும் தனது

இளவர் மகன் பிரணய் என்பவருக்காகவும் **M.C. No. 2 of 2024** என்ற எண்ணில் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் மேற்படி முதன்மை மனுவின் எதிர் மனுதாரரான ஹரிபிரபாகரன் என்பவர் **கு.வி.மு.ச. பிரிவு 311–ன்** கீழ் எதிர்மனுதாரர் ஹர்ஷனா என்பவர் பெயரில் ரூபாய் பத்து லட்சம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அது குறித்த விபரங்களை இந்த நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டி மேற்படி வனவாசி தபால் நிலைய தலைமை அதிகாரியின் விசாரிக்க வேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேலும் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் இதே போன்றதொரு மனு தாக்கல் செய்யப்பட்டு நங்கவள்ளி தபால் நிலைய அதிகாரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அவர் இந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகி, மேற்படி மனுவில் கோரப்பட்ட விபரங்கள் எதுவும் எனக்கு தபால் நிலையத்தில் இல்லை என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் புதியதாக வனவாசி தபால் நிலையத்தில் மேற்படி விபரங்கள் இருப்பதாக கூறி, அது சம்மந்தப்பட்ட அலுவலரை விசாரணை செய்ய வேண்டும் என கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணங்களை குறிப்பிட்டு இந்த மனுவை அனுமதிக்க கோரி மனுதாரர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டது.

3. **எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:–** இந்த வழக்கை இழுத்தடிக்கும் நோக்கில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவின் மனுதாரர் கூறுவது போல் ரூபாய் 10 லட்சம் வனவாசி தபால் நிலையத்தில் மனுதாரர் பெயரில் வைப்பீடு செய்யப்படவில்லை எனவும், எனவே வனவாசி தபால் நிலைய அதிகாரி முன்னிலையாகி சாட்சியம் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும், அப்படியே மனுதாரரின் பெற்றோர் வைப்பீடு செய்திருந்தாலும், அது இந்த மனுவில் மனுதாரருக்கு சாதகமாக அமையாது எனவும், சட்டப்படியாக மனுதாரர்களை பராமரிக்கும் கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது எனவும், ஆனால் அதன்படி மனுதாரர்களை பராமரித்ததே இல்லை

எனவும், மனுதாரரின் பெயரில் தபால் நிலையத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்ற ஒரு கட்டுக்கதையை கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த மனுவில் எதிர்மனுதாரருக்கு எந்த ஒரு பரிகாரமும் கிடைப்பதற்கு இல்லை எனவும், இந்த மனுவை தள்ளுபடி செய்ய கேட்டு எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டு அவ்வாறே கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இந்த நீதிமன்றத்தில் தனது வாதங்களை முன்வைத்துள்ளார்.

4. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. இந்த மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி ரூபாய் 10 லட்சம் தபால் நிலையத்திற்கு வைப்பீடு செய்யப்பட்டுள்ளதால் தங்களை தானே பராமரிக்கும் வசதி உள்ளது என்று நிரூபிக்கும் காரணத்திற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. இந்த சூழ்நிலையில் குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 311–ன் கீழ் இந்த நீதிமன்றம் ஒரு சரியான மற்றும் நியாயமான தீர்வுக்கு அவசியம் என கருதப்படும் சாட்சிகளை மட்டுமே அழைத்து விசாரணை செய்ய வேண்டும்.

7. எனவே, மேற்படி இந்த மனுவின் எதிர்மனுதாரர் பெயரில் ரூபாய் பத்து லட்சம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சங்கதி எவ்விதத்தில் இந்த மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்க (அல்லது) ஜீவனாம்சம் வழங்க வேண்டிய தொகையை குறைக்க உதவி செய்யும் என்பது குறித்து இந்த நீதிமன்றம் தற்போது தீர்மானிக்க வேண்டி உள்ளது.

8. மேற்படி தீர்மானிக்கும் முன்பாக முதன்மை மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி விசாரணை என்பது மனுதாரர் கற்றறிந்த எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யும் போது முதலில் ரூபாய் 10 லட்சம் நங்கவள்ளி தபால் நிலையத்தில் வைப்பீடு செய்யப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டு பிறகு இல்லை என மாற்றி சாட்சி சொல்லி உள்ளதை இந்த நீதிமன்றம் கவனத்தில்

கொள்கிறது. இந்த மனுவின் பேரில் தாக்கல் செய்ப்பட்ட எதிர்உரையிலும் மேற்படி தொகை வைப்பீடு செய்யப்பட்டதாக ஒப்புக்கொள்ளப்படவில்லை.

9. மேற்படி இந்த மனுவின் சங்கதிகளை ஒன்றிணைத்து வழக்கு சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **மணிஷ் ஜெயின் எதிர் அக்கான்ஷா ஜெயின் – 2017 AIR SC 1640** என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் ஒரு நீதிமன்றம் ஒரு நபருக்கு ஜீவனாம்சத் தொகை வழங்குவது குறித்து தீர்மானிக்கும் போது, ஜீவனாம்சம் வழங்கும் நபரின் நிதி நிலைமை மற்றும் ஜீவனாம்சம் பெரும் நபர் தன்னை பராமரித்துக் கொள்ளும் அளவிற்கு போதுமான தனிப்பட்ட வருமானம் அவருக்கு உள்ளதா என்ற காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ளதை இந்த நீதிமன்றம் பணிவுடன் பின்பற்றுகிறது.

10. எனவே ஒருவேளை இந்த மனுவின் எதிர்மனுதாரர் பெயரில் ரூபாய் 10 லட்சம் வைப்பீடு செய்யப்பட்டிருந்தால் அதன் மூலம் அவருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது எனவும், அது முதல் எதிர்மனுதாரர்களின் அவரது மகனையும் பராமரித்துக்கொள்ள எந்த அளவிற்கு போதுமானது என்பதும், அதனை என்ன காரணத்திற்காக யார் வைப்பீடு செய்தாரர்கள் உள்ளிட்டவைகள் இந்த முதன்மை மனுவில் அவசியமாக எடுத்துரைக்கப்பட வேண்டிய சங்கதிகளாகும். எனவே மேற்கண்ட சங்கதிகளை நிரூபணம் செய்வதற்கு நீதியின் நலன் கருதி கட்டாயம் இந்த மனுவின் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

ஆகவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் **குற்றவியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 311–ன் கீழ்** தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கப்பட்டு, பண வைப்பீடு சம்பந்தப்பட்ட வனவாசி தபால் நிலைய அதிகாரியை அழைத்து விசாரணை செய்ய 7 நாட்களுக்குள் உரிய கட்டணத்தின் பேரில் பதிவு தபால் மூலம் அழைப்பானை அனுப்ப இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டு என்னால் கையொப்பம் செய்யப்பட்டு முத்திரையிடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2025.05.22 18:01:31 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1, மேட்டூர்.**